**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்**
**முன்னிலை: திரு.R.மனோகரன், B.A., B.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சேலம்.**

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் வியாழக்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு–விசுவாவசு வருடம் – மாசி திங்கள் – 21–ஆம் நாள்)

**வழக்கிடை மனு எண்.8/2025**
**in**
**அசல் வழக்கு எண்.3/2023**

1.மாவட்ட ஆட்சியர், சேலம்
2.வட்டாட்சியர், சேலம் தாலுக்கா
3.தலைமை சர்வேயர், சேலம் தாலுக்கா
4.கிராம நிர்வாக அலுவலர், கன்னங்குறிச்சி

...மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள்

–எதிர்–

M.ராஜா ...எதிர்மனுதாரர்/வாதி

10.11.2025–ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 12.11.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.A.மதன்மோகன் M.Sc.,M.L.,M.Phil., அவர்கள் ஆஜராகினார். எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாலாஜி B.Com.,LLB., அவர்கள் ஆஜராகினார். இம்மனு 02.03.2026–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் ஆகியன பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

அசல் வழக்கு எண்.3/2023–ல் காலதாமதாக மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை கோப்பிற்கு எடுத்துக்கொள்ள அனுமதிக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் வகுமுறை 8 விதி 1(A)(3)–ன் கீழ் மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள் இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

**மனுவின் சுருக்கம்:**

**1.** மனுதாரர்கள் அசல் வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகள். 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை காலதாமதாக தாக்கல் செய்வதை மன்னித்து அதைக் கோப்பிற்கு எடுக்க வேண்டும். மேற்படி ஆவணங்கள் மனுதாரரின் தரப்பு சாட்சியத்திற்கு முக்கிய ஆவணங்கள் என்பதால் இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்:**

**2.** பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தை தற்போது தான் கண்டுபிடித்ததாக கூறுவது பொய். மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வரிசை எண்.1 ஆவணமானது தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் பிரிவு 7–ன் கீழ் 06.06.2023–ஆம் தேதியன்று வழங்கப்பட்ட அறிவிப்பு, வரிசை எண்.2 ஆவணமானது 29.05.2023 தேதியன்று நிலையில் ஆக்கிரமிப்பு பகுதிகளை காட்டும் தோராய வரைபடம். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை. இந்த ஆவணங்களை தற்போது குறியீடு செய்ய முடியாது. மனுவிற்கு முகாந்திரம் இல்லை. எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுக்குரிய பிரச்சனை:**

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதாகும்.

**தீர்முடிவு:**

**4.** மனு, எதிருரை, வழக்கு கோப்புகள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. மனு, எதிருரை சங்கதிகளை வலியுறுத்தி எடுத்துரைக்கப்பட்ட இருதரப்பு வாதங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

**5.** அசல் வழக்கானது 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஆவணத்தை கோப்பிற்கு எடுக்க வேண்டும் என்பது மனுதாரர்கள்/4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளின் கோரிக்கையாகும். மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் செல்லுத்தன்மை மற்றும் தொடர்புடைமை (Proof and relevancy) குறித்து நீதிமன்றத்தில் குறியீடு செய்யும் போது ஆட்சேபணை தெரிவிக்க வாதிக்கு வாய்ப்பு இருக்கிறது. வழக்குகள் அனைத்தும் தகுதி அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொது விதி. அந்த விதிக்கிணங்க காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை கோப்பிற்கு எடுத்துக்கொள்வதற்கு பிரதிவாதிகளுக்கு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதனால் வாதிக்கு அநீதி ஏற்படாது என்று இந்நீதிமன்றம் உளநிறைவடைகிறது. ஆகையினால், இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கிறது.

**இறுதி முடிவு:**

**6.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்ல சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANOHARAN Digitally signed by MANOHARAN
Date: 2026.03.05 13:08:56
+0530

இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேலம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

MANOHARAN Digitally signed by MANOHARAN
Date: 2026.03.05 13:09:00 +0530

இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேலம்.